Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/’67

சந்தா ரூ.**1.00**

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 65** அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன் சங்.143:8 மே 2019 No.5

## இந்தியாவுக்கு வந்த Dr.ஜான் ஸ்கடர் என்ற மருத்துவ மிஷனெறி *(பகுதி - 2)*

### *Dr. John Scudder : Medical Missionary to India (Part -2)*

Miss. Belle M. Brain

*(முதலாவது இலங்கைக்கும் பின்பு இந்தியாவுக்கும் மிஷனெறியாக வந்த தம்பதிகள் (ஸ்கடர் - ஹாரியட்) கடற்பிரயாணத்தில் பெண்குழந்தை நோயினால் இறந்ததால் கவலையடைந்தனர். தொடர்ந்து 18 மாதங்களில் இரு பச்சிளம் குழந்தைகளையும் இழந்தனர். இதயம் நொறுங்கிய அவர்கள் தேவனை நம்பி ஆவிக்குரிய பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள பணியைத் தொடர்ந்தனர்)*

இலங்கையை அடைந்து 8 மாதங்களுக்குப்பின் 1820-ல் ஜூலை மாதத்தில் ஒரு புதிய களத்தை பாண்டி டெரிப்போ என்ற வட இலங்கைப் பகுதியில் ஆரம்பிக்கக் கட்டளை பெற்றார். ஆழமான அக்கரையுடன் இந்தப் பணியில் அவர்கள் நுழைந்தனர். ஒரு முழு சபையை கவனிப்பது பெரிய பாரமாகவே இருந்தது. மக்களின் தாழ்வு நிலை கவலையளிப்பதாயிருந்தது. சங்.2:8-ன் படி “ஜாதிகளை உமக்கு சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்கு சொந்தமாகவும் கொடுப்பேன் என்ற நாள் நெருங்கி வரவில்லையா” என்று அவர் எழுதினார்.

“இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்துடன் ஜெபமும் வேதனைகளும் எதையும் செய்யமுடியும்” என்ற குறிக்கோளுடன் அவர் பணியில் இறங்கினார். ஒவ்வொரு நாளின் ஆரம்ப பகுதிகள் வியாதியுள்ளவர்களை குணமாக்குவதற்காக செலவிடப்பட்டது. அப்பகுதியில் அவர் ஒரே மருத்துவராயிருந்தபடியால் அவரது புகழ் சுற்றிலும் பரவியது. மக்கள் ஏராளமாக அவரைத் தேடிவந்தனர். அவரது இரண சிகிட்சைகள் அவர்களுக்கு அற்புதங்களாகக் காட்சியளித்தன.

இந்தப் பெரிய தாக்கம் சுவிசேஷத்தை பரப்ப மிகவும் உத்தமமாக பயன்படுத்தப்பட்டது. நோயாளிகள் அனைவரையும் ஒன்றன்பின் ஒன்றாக ஜெபித்து அனுப்பினார். தற்கால வேதனைகள், தங்கள் பாவங்களுக்காக மரித்த ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பெறும் நித்திய வேதனைகளோடு ஒத்துப்பார்த்தால் அற்பமானவை என்பதை நினைவுபடுத்தத் தவறவில்லை. துண்டு பிரதிகள் வாசிக்கக் கூடியவர்களுக்கு வினியோகிக்கப்பட்டு மற்றவர்களும் பயன்படச் செய்தார். அந்நாட்களில் அச்சடிக்கப்பட்ட துண்டு பிரதிகள் இல்லாததால் அவை அகன்ற விசிறி போன்ற பனை ஓலைகளில் எழுதப்பட்டு வினியோகிக்கப்பட்டன.

மருத்துவப் பணியோடு மிஷனெறியின் பணிகளும் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டன. பாடசாலைகள் நிறுவப்பட்டு பிரசங்கிக்கும் ஆராதனைகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. அவரிடம் வந்தவர்களுக்கு மட்டும் சுவிசேஷத்தை அறிவிப்பது போதாது என்று எண்ணி வீடு வீடாக சென்றும் பிரசங்கித்தார். வேளாவேளைகளில் பக்கத்து இடங்களுக்கும் பிரயாணம் செய்தார். அதனால் பல கடினங்களும் ஆபத்துகளும் நேரிட்டன. பாதை நெருக்கமான காடுகளாகவும், காட்டு விலங்குகள் நிறைந்ததாகவுமிருந்தாலும் தேவன் அவரைப் பாதுகாத்தார்.

ஜனங்கள் அவர் சுமந்து சென்ற துண்டு பிரதிகள், வேதபகுதிகள் ஆகியவற்றை அன்போடும் ஆவலோடும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் சில வேளைகளில் அவரைக் கல்லெறிந்ததும் தேவதூஷணம் பேசியதும், பரிகாசம் செய்ததும் சபித்ததுமுண்டு. ஆயினும் சிறிய வாய்ப்பு கிடைத்தாலும் சந்தோஷத்தோடே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். வயலில் வேலை செய்த விவசாயிகள், கடற்கரையிலுள்ள மீனவர் கள், மிஷன் வளாகத்தில் பணிசெய்த தச்சர்கள் அனைவருக்கும் அவர் பிரசங்கித்தார். இவையெல்லாம் எதிரிடையான காலநிலையிலும் அளவுக்கதிகமான வெப்பநிலையிலும் செய்யப்பட்டன. ஆயினும் நித்தியம் இளைப்பாறுதலுக்கு நீண்டதாயிருப்பதால் அது போதுமானது என்று கூறி இடைவிடாமல் உழைத்தார்.

அளவுக்கு மிஞ்சிய பாரத்தோடு அவரது சுறுசுறுப்பான மிஷனெறிப் பணியில் தனிஜெபத்திற்கும், அவர் முக்கியத்துவம் கொடுத்தார். அவரது மகன் அவரைக் குறித்து,“அதிகாலையில் 1½ மணி நேரமும் இரவில் 1 மணி நேரமும் வேதத்தை வாசிக்கவும், தியானிக்கவும், துதிக்கவும், ஜெபிக்கவும் எப்போதும் பரிசுத்தமாகக் காத்து வந்தார். மத்தியான வேளையில் வேதம் வாசிப்பதும், வெள்ளிக்கிழமைகளில் நடுப்பகல் வரை உபவாசித்து ஜெபிப்பது வழக்கம்” என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பழக்கங்களை தனது வாழ்வின் இறுதி மட்டும் அவர் கடைபிடித்து வந்தார்.

### ஒரு உத்தம மனைவியும் சுவிசேஷ ஊழியக்காரியும்

இதற்கிடையில் மனைவி ஹாரியெட் அம்மையாரும் ஒரு உண்மையான மிஷனெறியாகப் பணியாற்றி வந்தார். தனது பெரிய குடும்பத்தைப் பராமரித்ததுடன் பள்ளிகளில் ஆசிரியையாகவும் வீடுகளிலிருந்த பெண்களுக்குத் தையல் கற்பிக்கவும் சென்றார். டாக்டர் அவர்கள் நீண்ட பிரயாணங்கள் சென்றபோது அவரது பணிகளையெல்லாம் குறைவின்றி அம்மையார் கவனித்தார். அவர் வெளியே செல்வது கிரயம் செலுத்துவதாயிருந்தும் தைரியமாகவும், மகிழ்ச்சியுடனும் புன்முறுவலுடனும் அவரை ஊழியத்திற்கு தூரமான இடங்களுக்கு அனுப்பி வந்தார்.

அம்மையாருக்கு டாக்டரின் ஆரோக்கியம் குறைந்து வந்தது ஒரு மிகப்பெரிய கவலையாயிருந்தது. 1821-ம் ஆண்டு மிஷனெறி உற்சாகத்தில் நடைப்பயணமாக நெடுந்தூரம் சென்றதால் ஏற்பட்ட உடல்நலக்குறைவு தீரவில்லை. எனவே ஆரோக்கியக் குறைவுடன் பணிசெய்து வந்தார்.

1829-ல் அவரது உடல்நிலை மிகவும் மோசமானபடியால் மிஷன் அவரை இந்தியாவின் மேற்கு கடற்கரையிலுள்ள நீலகிரிக்கு அனுப்பியது. அங்கு காலநிலை குளிரும் உடலுக்கு புத்துணர்ச்சி கொடுப்பதுமாயிருந்தது. அவரைத் தனியாக அனுப்புவது அம்மையாருக்குக் கடினமாகத் தோன்றினாலும் அவரைத் தனியாகவே அனுப்பத் தீர்மானித்தார். நான் போவது நல்லதாயிருந்தாலும், எனது கடமைகளை எண்ணிப்பார்க்கும்போது நான் தியாகம் செய்வதே மேலானது. நானும் மிஷன் தளத்தை விட்டுச் செல்வதானால், எனது கதறுதல், “ஆண்டவரே எனது சிலுவையை எடுக்க என்னை பலப்படுத்தும் என்பதாயிருக்கட்டும்” என்று எழுதியிருக்கிறார். ஓராண்டிற்குப் பின் அவரை சந்தோஷத்தோடு வரவேற்க தேவன் கிருபை செய்தார். அவர் முற்றிலும் குணமடையாவிட்டாலும் ஆரோக்கியம் நன்கு முன்னேற்றமடைந்திருந்தது. - தொடரும்

**ஜுன் மாத உபவாச ஜெபம்**

Heart cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2019**

**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : ***08.06.2019***
சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

இடம் : Agape Bible Fellowship
12-B, Cross, Church Street,
Pillana Garden 3rd Stage,
Bangalore 600 045

தொடர்பு : **Pr.Reuben M.Sathiaraj**
மொபைல் : 077953 53391

# வருகையின் தூதன்

ஆசிரியர்:

வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001

VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.

**Mobile:** 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com

*அலுவலகம் : காலை 10.00 முதல் 1.00 வரை*
*மாலை 02.00 முதல் 6.00 வரை*
*(ஞாயிறு விடுமுறை)*


## இம்மாத பொன்னான சிந்தனை

**விசுவாசிகளை ஜெபிக்க வைக்கக்கூடிய மனிதனே இதுவரை உலகம் காணா மிகப்பெரிய எழுப்புதலை தேவனுடைய உதவியால் கொண்டு வருவான்**

## வாக்குத்தத்தம்

**கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய். செப்பனியா 3:15**

## உங்களுக்கு எனது உருக்கமான கடிதம்

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,*

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக மேய் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவது, வழக்கம் போல ஒரு வாசகரின் கடிதத்தை கீழே அச்சிடுகிறேன்.*

**Praise the Lord** *கீழ் கட்டளை*
*07.05.2019*

*அன்புள்ள ஐயா அவர்களுக்கு,*

*வருகையின் தூதன் பத்திரிகையை அனுப்புவதற்காக நன்றி. இந்த பத்திரிகையை பல வருடங்களாக படிக்கிறேன். மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. ஆவியிலே உற்சாகத்தைத் தருகிறது. காலதாமதமாக வருவதால் நாங்கள் எப்போது வரும் என்று ஆவலோடு காத்திருக்கிறோம். நானும் என் அம்மாவும் படித்து உற்சாகமடைகிறோம். ஊழியங்களுக்காக ஜெபிக்கிறோம். குறிப்பாக 7 மணி நேர உபவாச ஜெபத்திற்காக ஜெபிக்கிறோம். ஒரு முறையாவது கலந்துகொள்ள விரும்புகிறோம். ஜெபித்துக்கொள்ளுங்கள். பதிவு எண் : CN 02343*

*இரண்டாவதாக, வேறொரு கிறிஸ்தவ பத்திரிகையில் வெளியான ஆசிரியர் கடிதத்தின் ஒரே ஒரு பாராவை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன்:*

*கிறிஸ்தவத்தை இவ்வுலகில் எதிர்த்தவர்களில் ரோம அரசர்களைக் காட்டிலும் அதிகக் கொடுரமானவர்கள் எவருமே இல்லை. அவர்களில் முதல்வனான நீரோ பவுலை சிரச்சேதம் பண்ண உத்தரவிட்ட பின் சமாதானமற்றவனாக கவலையின் மிகுதியினால் தற்கொலை செய்து மடிந்தான். இவனுக்குப் பின்னுள்ள டொமிஷியஸ் தன் வேலைக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டு மாண்டான். ஹேடரியன் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு பயங்கர வேதனையோடு மரித்தான். டேஷியஸ் சேற்றில் புதையுண்டு மாண்டான். அவன் உடல் வெளியில் எடுக்கப்படக் கூடாமற்போயிற்று. டயோக்னிஷியன் பைத்தியம் பிடித்து அலைந்தான்; வல்லேரியஷ் உயிரோடு தோலுரிக்கப்பட்டு மரித்தான்; மேக்ஸிமாஸ் நான்று கொண்டு செத்தான். இயேசுவின் நாமத்தையே உலகில் இல்லாதபடி அழித்துவிடுவதாக சபதம் செய்த ஜூலியன் போரில் காயமடைந்து உயிர் பிரியும் வேளையில் தன் உடலிலிருந்து வடிந்த இரத்தத்தைக் கையால் அள்ளி வானத்துக்கு நேராக எறிந்து "நசரேயனே, நீயே ஜெபித்தாய்" எனக் கூறி மரித்தான். இப்படிப்பட்ட பயங்கரமான ரோம அரசர்களின் கீழ் கிறிஸ்தவம் கடுமையான உபத்திரவங்களை அனுபவிக்க நேரிட்டாலும் சபையின் ஆவிக்குரிய பொற்காலம் அதுவாகவே இருந்தது. ஆனால் தனக்கு முன்னுள்ள ரோம அரசர்களின் முடிவை அறிந்த கான்ஸ்டண்டைன் (கி.பி.317) கிறிஸ்தவர்களுக்கு சலுகை காட்ட முன்வந்தபோதுதான் இதுவரை தனித்தியங்கி கறை படாமல் காக்கப்பட்டு வந்த திருச்சபை உலகத்தை தனக்குள் அனுமதிக்க ஆரம்பித்தது. இதன் விளைவே இன்று நாம் காணும்* **கலப்புள்ள ஜீவனற்ற கிறிஸ்தவ மதம்.** *அதன்பின் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உலக ஜனத்தொகைக்கேற்ற படி உயரவில்லை. இன்னும் அந்த 6 சதவீதத்திலேயே அது இருக்கிறது. இதன் முக்கிய காரணம் உபத்திரவமின்மையேயாகும்.*

*மூன்றாவதாக, எனது டயரி:*

*ஏப்ரல் மாதம் 20-ம் தியதி தாங்கமுடியாத வலி (pain) சரீரத்தில் ஏற்பட்ட நிலையில், ஸ்கேன் எடுத்து பார்க்க நேரிட்டது. Lever-ல் ஒரு கட்டி இருப்பதாக கண்டறியப் பட்டது.*

*மருத்துவர்களாயிருக்கும் எனது உறவினர்களின் ஆலோசனைப்படி சென்னை சென்று அரசு மருத்துவமனையில் 7, 8, 9 தியதிகளில் ஆய்வு செய்யப் பட்டது. அறுவை சிகிட்சை செய்யப் பட வேண்டும் என்ற அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டாலும், 17-ம் தியதி நடைபெற வேண்டிய உபவாச ஜெபத்திற்காக மருத்துவரின் அனுமதிப் பெற்று 10-ம் தியதி சென்னையிலிருந்து புறப்பட்டு 11-ம் தியதி சனிக்கிழமை நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.*

*கர்த்தருக்கு சித்தமானால், 16-ம் தியதி ரயில் மார்க்கமாக திருப்பூர் சென்று 17-ம் தியதி வெள்ளிக்கிழமை 7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்துவோம்.*

*17-ம் தேதி இரவு திருப்பூரிலிருந்து சென்னைக்கு சென்று, அறுவை சிகிட்சைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சேர இருக்கிறேன். சரீரத்தில் மிகவும் பெலவீனமாயிருக்கிற உங்கள் சகோதரனுக்காக தயவாய் பாரத்தோடு ஜெபிக்குமாறு பட்சமாய் கேட்கிறேன். விபரங்களுக்கு மகன் சாமுவேல் மொபைல் எண்களை தொடர்பு கொள்ளுங்கள் : 9543221008; 9489740295 நன்றி.*

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.* *உங்கள் சகோதரன்,*
*தேவ கிருபை உங்களோடிருப்பதாக.* **வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)


**வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம். ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.**

**வங்கி கணக்கு :**

பத்திரிகை : VARUKAYIN THOOTHAN, A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

உபவாச ஜெபம் : **WESLEY DEVADASON,** A/c. No.: 37060100002557
I.O.B., Court Road, Nagercoil-1
IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : SYNB0006182


### எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 19.01.2019<br>3-வது சனி | பிலதெல்பியா சபை<br>கோயம்பத்தூர் – 5 |
| பெப்ரவரி | 16.02.2019<br>3-வது சனி | CSI கிறிஸ்து சபை<br>தெற்கு தாமரைகுளம், குமரி |
| மார்ச் | 16.03.2019<br>3-வது சனி | Bethesda Mauruba Thirusabai<br>79/2, Satras Main Road |
| ஏப்ரல் | 13.04.2019<br>2-வது சனி | Methodist Tamil Church<br>Behind St. Stephen's Orthodox |
| மே | 17.05.2019<br>3-வது வெள்ளி | City A.G. Church<br>Ramaiah Colony 2nd Street |
| ஜூன் | 8.06.2019<br>2-வது சனி | Agape Bible Fellowship<br>12-B, Cross, Church Street |
| ஜூலை | 20.07.2019<br>3-வது சனி | Church<br>45, Jeyakodi Apartment |
| ஆகஸ்ட் | 10.08.2019<br>2-வது சனி | அழைப்பின் எதிரொலி சபை<br>சந்தோஷபுரம், சென்னை |
| செப்டம்பர் | 14.09.2019<br>2-வது சனி | நிம்ஸ் சபை<br>குஜராத் |
| அக்டோபர் | 19.10.2019<br>3-வது சனி | True Life Mission<br>Utter Pradesh |
| நவம்பர் | 16.11.2019<br>3-வது சனி | Eternal Life A.G.Church<br>Salem - 636 008 |
| டிசம்பர் | 7.12.2019<br>1-சனி | கிறிஸ்துகோவில் L.M.சபை<br>பள்ளியாடி, கன்னியாகுமரி மாவட்டம் |

### எழுப்புதலுக்காக இதய கதறல் சென்னை 2020
### Heart cry for Revival Chennai 2020

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 18.01.2020<br>3-வது சனி | Elohim Apostolic Church<br>Pudichur, Chennai |
| பெப்ரவரி | | |
| மார்ச் | | |
| ஏப்ரல் | | |
| மே | | |
| ஜூன் | | |
| ஜூலை | | |
| ஆகஸ்ட் | | |
| செப்டம்பர் | | |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

# கவலையின் நேரத்தில் விசுவாசம்

***Faith in an hour of anxiety***

D.M. Panton (1870-1955)

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" *1 பேதுரு.5:7.*

தேவன் மேல் எதனை வைத்துவிட வேண்டுமென சிந்திப்போம். தேவன் கடமை செய்வதில் கவனமும், எதிர்காலத்தைக் குறித்த கரிசனையும் இருக்க வேண்டுமென்ற பாரத்தை வைத்திருக்கிறார். தீத்து.3:8-ன் படி "....... தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்". ஸ்பர்ஜன் என்ற பக்தன், "அன்பு செலுத்துவதிலும், தேவனை இன்னும் அதிகமாய் சேவிப்பதிலும், அவரது வார்த்தையைப் புரிந்து கொள்வதிலும், அதைப் பிரசங்கிப்பதிலும், அவரது உறவை அனுபவமாக்கிக் கொள்வதிலும் ,அவரோடு நடப்பதிலும் நிலைத்திருக்க வேண்டும்" என்கிறார்.

'கவலை' என்ற பதம் கிரேக்கத்தில் வித்தியாசமானது. 'பயத்தோடு கூடிய கவலை', 'கலங்கிய உள்ளம்' ஆகியவற்றைக் குறிக்கிறது. தமிழில் கவலை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புற்றுநோய் போன்று வளர்ந்து படர்ந்த கவலையை இது குறிக்கிறது.

பிரஞ்சு மொழிபெயர்ப்பின்படி 'உங்கள் கவலைகளையெல்லாம் தேவன் மேல் இறக்கி வையுங்கள்' என பொருள்படுகிறது. நிலக்கரி வண்டிகளிலிருந்து நிலக்கரி இறக்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். வண்டியின் பின்புறம் அழுத்தம் கொடுக்கப்படும் போது அது சாய்ந்து அதிலுள்ள சுமை தரையில் விழுகிறது. இப்படித்தான் நாமும் நமது கடுமையான கவலைகளையெல்லாம் இறக்கிவிட வேண்டும்.

நாம் அனைத்து கவலைகளையும் தேவன் மேல் வைக்க வேண்டும். சிலவற்றை மட்டுமல்ல, பெரியவைகளை மட்டுமல்ல, எல்லாக் கவலைகளையும் அவர்மேல் வைத்துவிட வேண்டும். சில கவலைகள் நமக்கே உரியவைகள். சில கவலைகள் பிறரோடு தொடர்புடையவை. நமது வருங்கால ஆவிக்குரிய நிலைமை குறித்த கவலைகளும் முக்கியமானவை. நமது உடல் நலக்குறைவு, சூழ்நிலைகள், தொழில் சம்பந்தமானவை, பிள்ளைகளின் எதிர்காலம், யுத்தக்களத்திற்குச் சென்ற உறவினர், இன்றைய அல்லது வருங்கால பாடுகள் போன்றவை கவலையளிக்கின்றன.

கவலைகளை உலகமக்களைப் போல பாவத்தில் மூழ்கி போக்க நினைக்க வேண்டாம். மகிமையான விசுவாசத்தின் மூலம் அவற்றை தேவன்மேல் விட்டுவிட வேண்டும்.

யாரோ ஒருவர் அவைகளை சுமக்க வேண்டும். நான் சுமப்பதானால் அவை என்னை அழுத்திக் கொன்று விடும். ஆனால் தேவன் அவைகளை எடுத்துவிட்டால் (பாவத்தின் சுமை - மிகப் பெரியது) அது கிறிஸ்துவின் சிலுவையில் வைக்கப்படுகிறது - அவர் நீக்க முடியாத சுமை எதுவுமில்லை.

Dr. F.B. மேயர் இவ்வாறு அழகாகக் குறிப்பிடுகிறார்: "அவரால் கன்மலைகளை நொறுக்கவும், கடல்களைத் திறக்கவும், ஆகாயத்தின் பொக்கிஷங்களை வெளிக்கொண்டு வரவும், பூமியின் பண்டகசாலைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்கவும் முடியும். அவர் கட்டளையிட பறவைகள் இறைச்சியையும், மீன் நாணயத்தையும் தரும். தீவுகளை அவர் எளிதாக எடுக்க முடியும். அப்படியானால் உங்கள் மிகப் பெரிய பாரத்தை சுமக்க முடியாதா!"

இந்த வார்த்தைகளுக்குப் பதிலாக உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் எறிந்து விடுங்கள் என்று கூட கூறலாம். நமது பரம தந்தை சர்வ வல்லவர், ஞானம் நிறைந்த அன்புள்ளவர். எனவே அவரது இரக்கமுள்ள கரங்களில் நமது வருங்காலங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும். அவரது அன்பில் நமது கவலைகளை ஒப்புவிக்க வேண்டும்.

"உங்கள் இருதயம் கலங்கவும் பயப்படவும் வேண்டாம்" யோவான் *14:27*

### தேவனுடைய சேனை

அப்போஸ்தலனாகிய பவுல் நாம் எப்படி கவலைகளை அவர் மேல் வைப்பது என்பதைக் குறித்து பிலி.4:6-7 வசனங்களில் குறிப்பிடுகிறார் : "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்".

ஜெபம் தேவனிடம் நமது கவலை என்ன என்பதை அறிவிக்கிறது. ஆனால் விசுவாசம் கவலையின்றி எழுந்து தேவனிடம் அவைகளை விட்டுவிட்டு கடந்து செல்லுகிறது. எசேக்கியா ராஜா சனகெரிப்பிடம் இருந்து வந்த பயமுறுத்தும் கடிதத்தை தேவாலயத்தில் தேவனுக்கு முன்பாக விரித்து வைத்துவிட்டு சமாதானத்துடன் புறப்பட்டுச் சென்றான். 'எதற்கும் கவலை வேண்டாம், எல்லாவற்றிற்கும் ஜெபத்தோடிருங்கள், எதற்கும் நன்றி செலுத்துங்கள்' என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

தேவன் நம்மீது கரிசனையுடையவராயிருப்பதால், நாம் நமது கவலைகளை அவரிடம் ஒப்படைக்கும் போது அவற்றை மிகவும் பத்திரமானதும், மிகவும் நல்லதுமான கரங்களில் ஒப்படைத்துவிட்டோம். நமது கரங்களிலிருப்பதை விட மிகவும் பாதுகாவலான கரங்களில் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. நமது கவலைகளை எல்லாம் அவர் மீது வைக்க வேண்டும். அவர் கவலைப்படுகிறவரல்ல. மாறாக அவர் தேவனாயிருப்பதால் நம்மீது கரிசனையுடையவரும் விசாரிக்கிறவருமாயிருக்கிறார். அன்பான விருப்புடன் உற்சாகப்படுத்தி கவனிக்கிறார்.

சீர்திருத்த காலத்தின் உச்சக் கட்டத்தில் லூதர், நாம் 46-ம் சங்கீதத்தைப் பாடுவோம், அவர்கள் தங்கள் விருப்பப்படி எந்த தீமையையும் செய்யட்டும் என்று நண்பரிடம் கூறினாராம்.

நமது விசுவாசம் நெருப்பில் புடமிடப்படுகிறது. பொற்கொல்லனைப் போல தேவன் நெருப்பை கவனிப்பதில்லை. அவருடைய கரிசனை பொன்னின் மீது மட்டுமே.

### தேவன் தனிப்பட்ட முறையில் உங்களை விசாரிக்கிறவர்

நமது பாரங்களை தேவன் மேல் வைத்துவிட வேண்டுமென்பது குறிப்பாக தனிப்பட்டவர்களுக்குரியது. இதைக் குறித்து நமது ஆண்டவர் *மத்.6:25, 32 வசனங்களில் கூறுகிறார்:* "ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் ..... இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்". கிறிஸ்து இதை எனக்கும் உங்களுக்கும் அனைவருக்கும் கூறுகிறார். அவர் எனக்காகக் கவலைப்படுகிறவர். எந்தக் கவலையும் அவர் என்னிலிருந்து அகற்றுவார்.

தேவனுடைய தனிப்பட்ட முறையிலான கரிசனை எவ்வளவு அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சங்.50:11-ல் "மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள்" என்று தேவன் கூறுகிறார். "பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படி தேடும்" சங்.104:21. "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது...... அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" *மத்.10:29-31.*

"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்" *சங்.55:22.*

# விசுவாசத்தின் பாதையின் கடினமான இடங்கள்

## *Hard places in the way of faith*

A.B. Simpson

“மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள் மேலும் போய்க் கரையேறக் கட்டளையிட்டான். இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்” அப்.27:44.

ரோமாபுரிக்குப் பவுல் சென்ற கப்பற் பயணம் சோதனைகளையும் வெற்றிகளையும் உடையது. இது மானிட வாழ்வில் வரும் பிரகாசமானதும், இருளானதுமான விசுவாச பாதைக்கு எடுத்துக் காட்டாய் காணப்படுகிறது. தேவனுடைய அசாதாரணமானதும் நமது கடினமானதும் ஒடுங்கியதுமான பாதைகளில் கலந்திருப்பது ஒரு முக்கிய அம்சம்.

விசுவாசத்தின் பாதை ஒரு மலர்ப்படுக்கை என்றும் துன்பங்கள் வரும்போது தேவன் தமது ஜனங்களின் வாழ்வில் தலையிட்டு அவர்களைத் தூக்கிவிடுகிறார் என்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் உண்மையான அனுபவம் எதிர்மாறானது. தேவனை நாம் நம்பும்போதுதான் சோதனைகளும் துன்பங்களும் மேலிடுகின்றன. ஆபேல் முதல் இறுதி இரத்தசாட்சி வரை ஒவ்வொருவருடைய வாழ்விலும் சோதனையும் வெற்றியும் மாறிமாறி வருவதை வேத புத்தகம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

ஆபிரகாம் என்னும் முற்பிதாவின் வாழ்க்கையைப் பார்ப்போம். தேவனை விசுவாசித்து வாக்குத்தத்த நாட்டை சுதந்தரிக்க அவன் புறப்பட்டுச் சென்றான். முதலாவது அந்த நாட்டில் அவன் சந்தித்தது பஞ்சமும் தனிமையும். எனவே வாழ்வாதாரத்திற்காக அவன் எகிப்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அவனது பாதையெல்லாம் இடுக்கமானதும் வேதனையும் சோதனையும் நிறைந்ததாகவும் இருந்தது. அவன் பெற்ற ஆசீர்வாதங்கள் கடுமையான அனுபவங்கள் மூலமாகவும் இயற்கையாகக் கூடாதவைகளென்ற நிலையிலும் கிடைக்கப்பெற்றன.

ஈசாக்கின் வாழ்வு இதைவிடப் பாடுகள் நிறைந்தது. அவனது அருமை மகன் ஏமாற்றமளிப்பவனாயிருந்தான். அவன் தோண்டிய துரவுகள் அவனை அயலார் வெறுக்கவும் ஒதுக்கவும் ஏதுவாயிருந்தன. அவன் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் துரத்தப்பட்டான்.

யாக்கோபின் வாழ்வு நீண்ட கால சோதனையின் நாட்களாகவே இருந்தன. அவனது சந்தோஷமான இறுதி நாட்களில் அவற்றை எண்ணி, “என் ஆயுசு நாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது” ஆதி.47:9 என்று குறிப்பிடுகிறார்.

அந்த வரிசையில் வந்த யோசேப்பு சோதனைக்காகவே பிறந்தவன் என்று சொல்லலாம். அவனது ஆரம்ப நாட்கள் பிரகாசமாயிருந்தாலும், பின் நாட்களில் சகோதரரால் பகைக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டு பலவித குற்றச்சாட்டுகளையும் சிறைவாசத்தையும் அடைந்தான். பவுல் கப்பல் சேதத்திலிருந்து தப்பினது போல இறுதியில் உயர்வை அடைந்தான்.

மோசேயும் ஒடுங்கிய துன்பப் பாதைகளைக் கடந்து சென்றான். அவன் “அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான்” எபி.11:25.

இஸ்ரவேலின் முதல் அரசனாகிய தாவீது சிங்காசனம் அவனுக்கு வாக்குப் பண்ணப்பட்ட பின்பும் யூதாவின் மலைப் பிரதேசத்தில் ஒரு கவுதாரியைப் போல வேட்டையாடப்பட்டான். அவன் பாலைவனத்தின் குகைகள் தோறும் ஒளிப்பிடம் தேடி அலைந்தான். மயிரிழையில் பலமுறை உயிர்தப்பினான்.

பாடு அனுபவிக்கிறவராக இவ்வுலகில் வந்த எம்பெருமான் இயேசு மிகப்பெரிய எடுத்துக்காட்டாக இருக்கிறார். பாடுகள் வழியாக அவர் பரிபூரணப்படுத்தப்பட்டார். சிறு பருவத்தில் ஏரோதின் கைக்குத்தப்ப எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். மனித மீட்புக்காக கெத்சமனேயில் இரத்த வியர்வை சிந்தி ஜெபிக்கவும் கொல்கொதா மேட்டிலே சிலுவையில் மரிக்கவும் வேண்டியதாயிருந்தது.

ஒரு தேவ பிள்ளை சகிக்கக்கூடிய அனைத்துப் பாடுகளையும் அப்போஸ்தலனாகிய பவுல் சகித்தார். அவரது மனமாற்றத்திற்குப் பின் தமஸ்குவில் யூதர்களால் பாடுபடுத்தப்பட்டு உயிருக்காக ஓடவேண்டியதாயிற்று. அப்போது ஒரு ஜன்னல் வழியாக அவர் கூடையில் வைத்து இறக்கப்பட்டு பகைவரிடமிருந்து தப்பினார் 2 கொரி.11:33. பழைய துணிகள் வைக்கப்பட்ட கூடையில் ஆண்டவராகிய இயேசுவின் ஊழியக்காரன் இறக்கப்பட்டு விரோதிகளிடமிருந்து தப்பினார்.

மேலும் தனித்து குகைகளிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், நண்பர்களின் கைவிடுதல்களிலும், அடிகளிலும் அவர் கடந்து சென்றார். கடலில் வந்த அபாயமும், தந்திரம் நிறைந்த கப்பற்காரரை பாதுகாப்பதிலும், அனைவரும் தப்பியோடாமலிருக்க வேண்டுமென்பதை அறிவிப்பதிலும் ஜாக்கிரதையாயிருந்தார்.

விடுதலை வந்தபோது பரலோக சேனை இறங்கி வரவில்லை. தூதர்கள் வந்து தண்ணீர்கள் மேல் நடக்கவோ, கொந்தளிக்கும் ஜலத்தை அமர்த்தவோ செய்யவில்லை. ஒருவர் பலகை மேலும், இன்னொருவர் கப்பல்துண்டின் மீதும், சிலர் நீந்தியும் பத்திரமாகக் கரை சேர்ந்தனர்.

### நமக்கு தேவன் வைத்திருக்கும் மாதிரி

இந்த அனுதின உலகில் சாதாரண உண்மை சூழலில் நாம் வாழும்போது நாம் சந்திக்க வேண்டிய பல செயல்முறை நிபந்தனைகள் செயல்முறை வழிகளில் சந்திக்க இங்கு ஒரு விசேஷ உதவி காணப்படுகிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களும், வழிகளும் நம்மை சாதாரண சோதனைகளிலிருந்து விலக்குவதில்லை. ஆனால் இவற்றின் வழியாக விசுவாசம் பூரணமடைகிறது. மேலும் தேவன் தமது அன்பை நமது அனுதின வாழ்வில் வெளிப்படுத்த ஏதுவாகிறது.

நமது சாதாரண நடைமுறைகளில் தேவன் வந்து உதவி செய்கிறார் என்பதை நாம் உணருவது நமக்கு உதவியாயிருக்கிறது. எனவே அவர் ஆயிரக்கணக்கான கஷ்டங்களை அளித்தாலும் நமது ஜெபங்களுக்குப் பதிலளித்து ஏற்றவேளையில் விடுதலை தருவார்.

எனவே தேவன் நம்மைக் கடினமானதும். தூரமானதுமான பாதையில் நடத்தி, நமது கால்கள் களைப்படைந்தாலும் அவர் நம்மோடிருக்கிறார். இஸ்ரவேலரை வழிநடத்திய மேகஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமும் நம்மோடிருக்கும். எம்மாவூர் சென்ற சீஷர்கள் அவர்களோடு சென்ற ஆண்டவரை அறிந்துகொள்ளவில்லை. ஆனால் அவரது வார்த்தைகள் மூலம் அவர்களது இருதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்தன.

கடின பாதைகளில் அவரை நாம் கண்டுகொள்வோம். சிறிய காரியங்களில் அவரைக் காண முயற்சிப்போம். சாதாரணமான நமது செயல்பாடுகளில் நமது ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்ளவும் நமது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றவும் வாஞ்சிப்போம். அப்போது எல்லாம் புனிதமாக மாறும். “முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்கு கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவுமிருக்கும்” ஏசா.55:14.

### நமது தாழ்ச்சிகளும் தோல்விகளும்

கடின பகுதிகள் நம்மை நமக்கு வெளிப்படுத்தக்கூடிய விலையேறப் பெற்ற வாய்ப்புகள். அவை நமது குறைவுகளையும் தோல்விகளையும் நமக்குக் காண்பிக்கின்றன. அவை தேவனுடைய செயல்கள். ஆவிக்குரிய தோண்டி எடுத்தலும் நமது வாழ்வையும் குணங்களையும் கட்டி எழுப்பும் செயல்களாகும். சோதனை வரும் வரை நாம் பெற்றிருக்கும் கிருபைகளையும், தன்மைகளையும் நாம் அறியோம். பின்புதான் விசுவாசமும் தைரியமும் நம்மில் கொழுந்துவிட்டு எரிவதால் உற்சாகமும் தூண்டுதலும் உண்மையாக வெளிப்பட்டு ஆத்துமா தனது வெறுமை, உதவியற்ற நிலை ஆகியவற்றை அறிந்து கொண்டு கிறிஸ்து ஒருவரே எல்லாவற்றிற்கும் எல்லா மானவர் என்ற நிலைக்கு வருகிறது.

யாக்கோபின் சோதனைகளில் அவன் சுயம் முடிவுபெறுகிறது. தனது சுயநீதி. சுயநம்பிக்கை ஆகியவை முடிவுக்கு வர யோபின் துன்பங்கள் ஏதுவாயிருந்தன. பேதுருவின் வீழ்ச்சி அவனது பெருமை, சுயதிருப்தி

(5-ம் பக்கம் பார்க்க)

**நிர்வாக வசதிக்காக**

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

(4-ம் பக்க தொடர்ச்சி)

ஆகியவை உடைக்கப்பட்டு கிறிஸ்துவில் மட்டும் பெலனுக்காக சார்ந்து கொள்ளும் ஆசீர்வாதத்தைப் பெற்றுத்தந்தது.

நீங்கள் உங்கள் சொந்த பெலனைக் குறித்து எண்ணுவதெல்லாம் அதிகப்படியானது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள தேவன் விரும்புகிறார். "நானல்ல, கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறார்" கலா. 2:20 என்ற அனுபவத்திற்குள் நீங்கள் வரவேண்டும்.

## தேவன் எல்லாவற்றிற்கும் போதுமானவர்

கடின பகுதிகள் தேவனுடைய பொக்கிஷத்தை நாம் அறிந்துகொள்ள ஏதுவாயிருக்கிறது. கடினமான சூழ்நிலைகளில்தான் அவருடைய எல்லாவற்றிற்கும் போதுமான தன்மையை நாம் அறியமுடிகிறது. இஸ்ரவேல் முதலாவது அமைதியாக நின்ற பின்புதான் தேவனுடைய பெரிய இரட்சிப்பைக் காணமுடிகிறது. தங்கள் சொந்த கிரியைகளை அவர்கள் நிறுத்தியபோது தேவன் தமது வல்லமையை விளங்கப் பண்ணினார். ஆகவேதான் அவர்களை வனாந்தர பாதையிலும் தண்ணீரும், உணவும் கிடையாத பாதைகளில் நடத்தி அனைத்து தேவைகளுக்கும் அவரே போதுமானவர் என்று காண்பித்தார். "...... மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" உபா.8:3. நமது தேவைகளுக்கு ஏற்ப மற்றும் கடின சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் நிரப்பப்படக்கூடிய பாத்திரமாகவும் அவரது அளவற்ற ஞானம், வல்லமை, கிருபை ஆகியவற்றைக் காண்பிக்கிறவருமாயிருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல், தான் எல்லாவிதமான துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டபடியால் கிறிஸ்துவின் வல்லமை அவர்மீது தேவைக்கேற்ப தங்கியிருக்க முடிந்தது என்றும் எனவே அவர் ஒவ்வொரு புதிய சூழல்களையும் தன்னை நிரப்புவதற்காக தேவன் அளித்த இன்னொரு பாத்திரம் அல்லது இன்னொரு தருணம் என்றும் எண்ணி, "என் கிருபை உனக்குப் போதும்" 2.கொரி.12:9 என்பதை முழு மனதோடு ஒத்துக்கொண்டார்.

நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் தேவன் போதுமானவர் என்பதை நாம் நிரூபிக்கிறோம். மேலும் உலகிற்கு கிறிஸ்து இயேசுவில் தமது ஐசுவரியத்தின் படியே அனைத்து தேவைகளையும் அளிக்கிறவர் என்று கூறி அவரை மகிமைப்படுத்தமுடியும்.

## தேவனில் உறுதி

சோதனை என்பது நம்பிக்கையின் வளமான மண். துன்பங்கள் நமது உறுதியை வலுப்படுத்தி தெய்வீக உத்தமத்தையும் அன்பையும் நம்மில் உருவாக்கும் தெய்வீக ஒத்தாசைகள்.

நாம் எழுந்து தனியாக, காணப்படாத தேவனோடு நடப்பது பேதுரு தண்ணீரில் நடந்தது போன்ற ஒரு புதிய அனுபவம். தேவன் ஒருவரே நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமானவர் என்ற நம்பிக்கை நம்மில் இருந்தால் மட்டுமே இந்த அனுபவத்தைப் பெறமுடியும். நமது மெல்லிய பெலனுக்கேற்றபடி அவர் சோதனைகளை தந்து பெலனடைய அதிக வலுவான சோதனைகளைத் தருவார்.

## ஜெபம், அன்பு, பொறுமை மற்றும் தைரியம்

கடின அனுபவங்கள் அதிகமாக ஜெபிக்கவும், அதிகமாக தேவனோடு தனித்திருக்கவும் நம்மை நெருக்கி ஏவுகின்றன. இத்தகைய அனுபவங்கள் யாப்போக்கு நதி அண்டையில் யாக்கோபு முழங்காலிடச் செய்தன ஆதி.32:22-32. அவை தாவீது 'உன்னதமானவரின் மறைவை' சங்.91:1 தேட போதித்தன. பவுல் கர்த்தருடைய சமூகத்தை எப்போதும் தேடவும் அவரை சார்ந்திருக்கவும் செய்தன. அவரது ஐக்கியமே நமது உன்னத ஆதாரமும் தீர்வும் என்பதை நம்மில் அனேகர் கற்றுக் கொண்டிருக்கிறோம். **பாடுகள், தேவைகள் மூலமாக தேவன் தமது பிள்ளைகளைத் தமது மார்போடு அணைத்துக் கொள்கிறார்** என்பது தாழ்மையான சத்தியம். ஆனால் பலவேளைகளில் நமக்கு அளிக்கப்படும் ஆறுதல் அவரை சார்ந்து கொள்ளத் தடையை ஏற்படுத்திவிடுகிறது. "நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்தும வியாகுலங்களை அறிந்திருக்கிறீர்" சங்.31:7 என்ற நிலையில்தான் நாம் ஆவிக்குரிய நிலையில் எழுச்சி பெற்று தேவனோடு நெருங்கிய உறவில் காணப்படுகிறோம்.

கடின பகுதிகள் அன்பை நமக்குப் போதிக்கின்றன. தேவன் நம்மை மிருதுவாக்கி நமது ஆவியை நல்வழிப்படுத்தி, நாம் பொறுமையாலும், அன்பாலும் நிரப்பப்பட, அவர் நம்மை மிகவும் கடினமான அனுபவங்களைக் கடந்து செல்லவும் அவரிடம் போய் 'சகலத்தையும் சகிக்கும்' அன்பை தெளிவுபடுத்திக் கொள்ளச் செய்கிறார். நம்மில் சோதனைக்குத் தகுந்த அளவு அன்பு இல்லை என்பதை நாம் முதலில் கண்டு கொள்கிறோம். தூய ஆவியானவர் நம்மைக் கண்டித்து உணர்த்தும் போது அவர் வல்லமையின் ஆதாரத்திற்கு நேராக வழிநடத்துகிறார். இவ்வாறு கிரமமாக தாழ்மையின் கல்வியை நாம் கற்றுக்கொள்ளும்போது அவர் நாள் தோறும் ஆழமான சோதனைகள், இனிமையான கண்டிப்புகள் மூலம் வழிநடத்துகிறார். இறுதியாக அவர் அக்கினி மூலமாக நமக்களித்த ஆவியின் கிருபை அவரது மேற்கொள்ளும் அன்பு ஆகியவற்றிற்காக அவரைத் துதிப்போம்.

கடின அனுபவங்கள் நமக்குப் பொறுமையைக் கற்பிக்கின்றன. பொறுமை என்பது கிறிஸ்தவ வாழ்வின் கிருபைகளில் மகுடம் போன்றது. அது நம்மில் பூரணமாய் விளங்கும்போது நாம் 'ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது' யாக்.1:4. **பாடுகள் என்ற பள்ளியில்தான் ஆவிக் குரிய வாழ்வின் உன்னதமான பாடத்தைக் கற்றுக்கொள்ள முடிகிறது.**

வாழ்வின் கடின பகுதிகள் நமக்கு தைரியத்தைப் போதிக்கின்றன. அவை பாடுகளின் பயத்தைப் போக்கி, வேதனையின் பயங்கரத்தை அகற்றி அவரது பலத்திலும், தைரியத்திலும் நிற்கச் செய்கின்றன. மேலும் பயத்தின் வல்லமையின் மேல் எழும்பி நிற்கவும் துன்பங்களை வரவேற்கவும், ஏற்படும் காயங்களோடு உறுதியாய் நின்று கிறிஸ்துவின் நல்ல போர்வீரராய் வெற்றிபெற ஏதுவாயிருக்கின்றன.

## தேவ கிருபை, வல்லமை ஆகியவற்றின் நோக்கம் பாடங்கள்

கடின அனுபவங்கள் நம்மை மாதிரிகளாகவும், நோக்கப் பாடங்களாகவும், பிறர் பயனடைந்து தேவ நாமம் மகிமையடையவும் ஏதுவாகின்றன. கிறிஸ்து தமது பிள்ளைகளுக்கு எவைகளைச் செய்ய முடியும், பிறர் தோல்வியடையுமிடங்களில் அவர் எதை நிறைவேற்ற முடியும் என்பதை உலகிற்குக் காண்பிக்கவும் முடியும். தேவன் நம்மை தூதர்களுக்கும், மனிதருக்கும் மத்தியில் வைத்திருக்கிறார். நமது முன்மாதிரி மூலமாக கிறிஸ்து எல்லா சூழல்களிலும் நம்மை நடத்துகிறவர் என்பதையும் அவரது கிருபையின் வல்லமை செயல்முறையிலானது அது மேலானது, எனவே மானுட வாழ்வில் யாவருக்கும் பொருத்தமானது என காண்பிக்கிறார்.

கடின பாதைகள் நமது அனுபவத்தில் நாம் கற்ற அனுபவங்களைக் கொண்டு பிறருக்கு உதவி செய்ய ஏதுவாயிருக்கின்றன. பாடு நிறைந்த உலகை ஆறுதல்படுத்தவும், அதற்கு ஆலோசனை சொல்லவும், அதனை ஆசீர்வதிக்கவும் நமது இருதயம் முதிர்ச்சியற்றதும், தகுந்த அறிவற்றதுமாயிருக்கிறது. தேவன் நம்மிடம் அளிப்பதையே நாம் பிறருக்கு அளிக்க முடியும். நாம் வாழ்வில் அனுபவித்த வேதனை நிறைந்த அனுபவங்கள் பிறரை ஆறுதல்படுத்தவும், பலப்படுத்தவும். உற்சாகப்படுத்தவும் உதவியாயிருக்கும். தேவன் யாரிடம் நம்மை நடத்துகிறாரோ அவர்களிடம் 'நானும் இவ்வாறான பாதையைக் கடந்துதான் வந்தேன் எனது அனுபவத்திலிருந்து பேசுகிறேன்' என்று கூறலாம். 'என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" பிலி.4:19.

பாடுகள் கிறிஸ்துவின் பாடுகளைப் போல உண்மையானவை என காண்பிக்கின்றன. அவை பரலோக முத்திரைகள். தேவனுடைய செய்திகளும், கிருபையின் தொடர்புகளும், ஆசீர்வாதங்களும் நம்மில் எழுந்து நிற்க அவை முத்திரை பதிக்கின்றன. அந்தச் சித்திரம் முதலாவது துண்டுபடுத்தப்படுகிறது. பின்பு முத்திரை பதிக்கப்படுகிறது. ஜுவாலை எரிந்து கொண்டிருக்க நிவாரணப்பணி நடத்தப்படுகிறது. அனைவரும் இதைப் பார்க்கவும் உணரவும் கூடும்.

தேவன் நம்மை துண்டுபடுத்தி அவரது செய்திகளால் மனித இருதயங்களை எரியச்செய்கிறார். அப்போது கிறிஸ்து நிஜமாகக் காணப்படுகிறார். கண்ணீருடனும், நடுக்கத்துடனும், கஷ்டங்களுடனும் கடந்து செல்லும் நாம் அவை தெய்வீக ஆசீர்வாதங்களுக்கு அடிவைக்கும் படிகளென்று பின்புதான் உணரமுடியும்.

கடின பாதைகள் நித்தியமான கிரீடத்தை நமக்கு அளிக்கின்றன. அவை வெற்றிகளுக்கு வழிவகுக்கின்றன. பரிசுகளையும் தருகின்றன. கிறிஸ்துவின் போர்வீரன் ஒருபோதும் கடந்து செல்லாத ஒரு சாதனையை நிறைவேற்றுகிறான்.

# எல்லா சோதனைகளிலும் பெறுவது எல்லாம் சந்தோஷம்

***All joy in all trials***

Charles H. Spurgeon (1834-1892)

“என் சகோதரரே நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது” யாக்.1:2-4.

முதலாவது சோதனையால் அதிகமாகத் தாக்கப்படுவது எது என்று கவனிப்போம். விசுவாசம் சோதிக்கப்படுகிறது. விசுவாசத்தினாலே தான் நாம் இரட்சிக்கப்பட்டு தேவனண்டை சேருகிறோம். எனவே விசுவாசம் தாக்கப்படுவது ஆச்சரியமல்ல. அந்தகார வல்லமைகளெல்லாம் சரியானவைகளையும் சத்தியத்தையும் எதிர்த்து நமது விசுவாசத்திற்கு எதிராகப் போராடுகின்றன. அதோடு சோதனைகள் லேகியோன்களாக தேவன் மேலுள்ள நமது உறுதிக்கு எதிராக படையெடுக்கும்.

விசுவாசத்தினாலே நாம் பிழைத்திருக்கிறோம். நாம் விசுவாசத்தால் பிழைக்க ஆரம்பித்துதொடர்ந்து வாழுகிறோம். ‘விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்’. விசுவாசம் உங்கள் ஆபரணமாகவும், சந்தோஷமாகவும் மகிமையாகவுமிருக்கிறது. பரலோக யாத்திரிகர்களிடமிருந்து இதை பறித்துக் கொள்ளும் திருடர்களுண்டு. தெரிந்தெடுக்கப்பட்ட பொக்கிஷமாகிய விசுவாசத்தைஇறுகபற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள்.

புயல் அதிகவேகமாக உங்கள் விசுவாசத்தின் மேல் மோதினால் பயப்பட வேண்டாம். அது உங்கள் ஆவிக்குரிய வீட்டின் அஸ்திபாரம். தற்கால சோதனைகளிலெல்லாம் உங்கள் விசுவாசம் அசையாமல் உறுதியாக நிற்கும். மரணவேளையிலும் நியாயத்தீர்ப்பு நாளிலும் அது உண்மையென விளங்கும்.

மேற்கூறிய வசனத்தின்படி நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படுகிறோம். அதாவது நாம் அனேக அல்லது பல்வேறு விதமான தொல்லைகளில் அகப்படலாம். இவை மிக உண்மையானவை. சூளை நீங்கள் பழகிக்கொள்ளும் அளவிலான வெப்பமுடையதல்ல. அது நேபுகாத்நேச்சாரால் தயாரிக்கப்பட்டது போல 7 மடங்கு வெப்பமுடையதாயிருக்கலாம். சூளையின் நெருப்பு எரிந்து விழுங்குவது அறியப்பட்ட உண்மை.

## சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்படுவது

சோதனைகள் மூலம் பெறப்படும் முக்கிய ஆசீர்வாதம், நமது விசுவாசம் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்படுவதாகும். நீங்கள் ஒரு நல்ல போர்வீரர் என்று நிரூபிக்கப்பட யுத்தக்களம் செல்ல வேண்டும். ஒரு கப்பல் நல்லவிதமாகக் கட்டப்பட்டுள்ளதா என்பதைக் கண்டு கொள்ள அதைப் பரிசோதனை செய்பவர் போதாது. அது கடலில் செலுத்தப்பட வேண்டும். ஒரு புயல் அடிக்கும் போதுதான் அதன் உண்மை நிலை நமக்குத் தெரியும். எனவே சோதனைகள் நமது விசுவாசத்திற்கு நிரூபணமாகின்றன. அழிந்து போகிற பொன் அக்கினியால் சோதிக்கப்படுவது போல அதைவிட விலையேறப்பெற்ற நமது விசுவாசம் சோதனைகள் மூலம் சுத்திகரிக்கப்படும்.

நாம் மறுக்காமல் சோதனையை சகித்தால் அது நமது உத்தமத்தைக் காண்பிக்கும். துன்பத்திலிருந்து வெளிவந்த கிறிஸ்தவன், “நான் என் உத்தமத்தில் உறுதியாயிருந்தேன், அதை விட்டு விடவில்லை. இடிப்புகளால் நான் நசுங்கிப் போகவில்லை. அழுத்தங்களிலும் தேவனுக்கு உண்மையாயிருந்தேன். இப்போது எனது மார்க்கம் ஒரு உத்தியோகமல்ல, அது தேவனிடம் நான் செய்த உண்மையான அர்ப்பணம் என்று உறுதியாயிருக்கிறேன். நான் நெருப்பை சகித்தேன், ஏனெனில் தேவ வல்லமை என்னைப் பாதுகாத்தது” என்று சொல்லுவான்.

கர்த்தருடைய மிகப்பெரிய பெலனை என் சொந்த பெலவீனத்தில் கற்றுக்கொள்வது விசேஷமாக இனிமையானது என்று காண்கின்றேன். சோதனையின்போது மிக பெலவீனமாயிருக்கும் நாம் ஜெபத்தின் விளைவாக தேவைக் கேற்ற பெலனைப் பெறுகிறோம். தேவையான நேரத்தில் தேவையான கிருபையை அவர் அளிக்கிறார்.

எனவே சோதிக்கப்படும்போது அதை ‘சந்தோஷமாக எண்ணுங்கள்’. ஏனெனில் இதன் மூலம் உங்கள் அன்பு நிரூபிக்கப்படும். உங்கள் விசுவாசமும் நிரூபணமாகும். நீங்கள் உண்மையாகவே மறுபடியும் பிறந்த தேவ பிள்ளைகள் என்பது உறுதியாகும்.

## சோதனை பொறுமையை உண்டுபண்ணும்

சோதனை மூலம் உருவாக்கப்படுவது பொறுமை என்ற நற்பண்பு. பொறுமையுள்ளவன் சோதிக்கப்பட்டவன். தேவ கிருபையால் அவன் பெறும் பொறுமை எத்தகையது!

முதலாவது அவன் பெற்றுக் கொள்ளும் பொறுமை சோதனைகளை தேவனிடமிருந்து முறுமுறுப்பின்றி ஏற்றுக்கொள்கிறது. அமைதலாக ஒத்துக் கொள்வது உடனடியாக வருவதில்லை. பல வருடங்கள் சரீர வேதனை, மன அழுத்தங்கள், பல துயரங்கள், ஏமாற்றங்கள் போன்றவைகள் வழியாகவே ஆத்துமா தன்னை ஆண்டவரின் சித்தத்திற்கு அர்ப்பணிக்க முடியும். கொஞ்சம் கொஞ்சமாக தேவனோடுள்ள கலகத்தை முடிவுக்குக் கொண்டுவர கற்றுக்கொள்கிறோம். தேவனுக்கும் நமக்குமிடையில் இரு சித்தங்கள் இருக்க முடியாது. எனவே தேவசித்தமே நமது சித்தமாக மாற வேண்டும்.

அடுத்த வகையான பொறுமை அனுபவத்தின் மூலம் வரும். மனிதன் கடுமையாக நடத்தப்படும்போதும், வையப்படும்போதும், காயப்படுத்தப்படும்போதும் எதிர்க்காமல் பொறுமையுடன் இருப்பதாகும். கூர்மையாக அதை உணர்ந்தாலும் சாந்தத்தோடு சகிப்பான். தன் எஜமானாகிய ஆண்டவர் இயேசுவைப் போல வாயைத் திறவாமலும், பதிலுக்குப் பதில் செய்யாமலுமிருப்பான். மாறாக சாபத்திற்குப் பதிலாக ஆசீர்வாதத்தைக் கூறுவான். அன்பு எல்லாவற்றையும் நம்பும், எல்லாவற்றையும் சகிக்கும், சினமடையாது என்ற ஆசீர்வாதமான பண்புகள் அவனில் வெளிப்படும். நீங்கள் சோதனை மூலம் தேவ கிருபையால் பொறுமையைப் பெற்றால் கோபம் உங்களில் காணப்படாது. உங்கள் அன்பு முடிவு பெறாது. சிறிய இழப்பை நீங்கள் பெற்றிருந்தாலும் ஒரு நிறைவான பண்பை அடைந்துவிட்டீர்கள்.

இது ஒரு விசேஷித்த விதமான பொறுமை கூட. ஏனெனில் நம்மால் **அவிசுவாசமின்றி காத்திருக்க முடிகிறது**. ஜெபி, காத்திரு ஆகிய இரண்டு பதங்களும் அனைத்து கிறிஸ்தவர்களும் கற்று அதன்படி நடக்க வேண்டியது அவசியம். கர்த்தருக்காகக் காத்திருப்பது என்பது ஜெபிப்பதையும் காத்திருப்பதையும் காண்பிக்கிறது. நாளைக்கே ஆண்டவராகிய இயேசு வராவிட்டால்! நமது பாடுகள் இன்னும் நீண்டு கொண்டே போனால்! சோதிக்கப்பட்டு தேவகிருபையால் சோதனைகளால் வரும் உண்மையான அனுகூலத்தைப் பெற்றவன் அமைதியாகக் காத்திருப்பதோடு சந்தோஷமாக தேவனுடைய இரட்சிப்பிற்காக நம்பிக்கையுட னிருப்பான்.

இவ்வித பொறுமை **தடுமாறாமல் விசுவாசிக்கக்கூடியது.** உறுதியுள்ள கிறிஸ்தவன், “நான் என் தேவனை விசுவாசிக்கிறேன், எனவே தரிசனம் தாமதித்தாலும் நான் அதற்காகக் காத்திருப்பேன். எனது வேளை இன்னும் வரவில்லை. எனது தீமைகளை நான் முதலிலும் நன்மைகளைப் பின்னாலும் பெற்றுக் கொள்வேன். எனவே இயேசுவின் பாதத்தில் நான் உட்கார்ந்து அவரது வேளைக்காகக் காத்திருப்பேன்” என்று கூறுவான்.

நாம் **சகிப்பதை** கற்றுக் கொண்டால் நாம் உயர்நிலையில் இருக்கிறோம். கடற்பிரயாணத்தில் இருக்கும் ஒருவன் கரையில் வாழும் மனிதனை விட எவ்வளவாக வேறுபட்டவன்! அவன் கடின இருதயமுடையவனாகவும் இரும்பால் செய்யப்பட்டவன் போலவும் தோற்றமளிக்கிறான். அவன் எப்படி கடினங்களுக்கு பழக்கப்பட்டுவிட்டான்! புயலையும் காற்றையும் சமாளிப்பது எப்படி என்று எண்ணுவதில்லை. காற்று தென்மேற்காகவோ, வடமேற்காகவோ வீசினாலும் அவன் கவலைப்படுவதில்லை. எந்த காலநிலையிலும் அவன் கடலில் பிரயாணம் பண்ணுவான். அவன் கால்கள் உறுதியாயிருக்கின்றன. இந்த பெலன் அவனுக்கு எப்படி வந்தது? அவன் கடலிலேதான் வேலைபார்க்கிறான். அவன் வீட்டிலேயே தங்கியிருந்தால் இந்த பெலனை பெறமுடியாது. இவ்வாறுதான் பரிசுத்தவான்களின் வாழ்விலும் ஆவிக்குரிய கடினங்களை எளிதில் கற்க முடியாது. பள்ளிக்குப் பல நாட்கள் சென்றாலும் பொறுமையைக் கற்றுக்கொள்ள முடியாது. உங்கள் கன்னங்களில் சாயம் பூசுவது எளிது. ஆனால் கடலின் புயலாலும், வீசும் கொடும் காற்றினாலும் முகத்தில் ஏற்படும் பழுப்பு நிறத்தைப் பெறமுடியாது. உறுதியான விசுவாசமும், துணிச்சலான பொறுமையும் துன்பங்கள் வழியாகவே வருகின்றன. உறுதியான சகிப்புத் தன்மையும் புனிதமான கடினத்தன்மையும் மேலிருந்தும், கீழிருந்தும் வரக்கூடிய தொல்லைகளின் திரட்சியினாலேயே ஏற்பட முடியும். சோதனைகள் பொறுமையைக் கொண்டு வரும்போது நாம் அதிகமாக

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

## பரிபூரணத்தையும் நிறைவையும் பெறுதல்

“நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி......” நமது துன்பங்கள் நமது விசுவாசத்தை சோதித்து பொறுமையை உண்டுபண்ணி அந்தப் பொறுமை கிறிஸ்து இயேசுவில் நம்மைப் பூரணராக ஆக்குமானால் நாம் சோதனைகளுக்காக சந்தோஷப்படுவோம். இவ்வாறாக துன்பங்கள் தேவகிருபையால் நம்மை முழுமைப்படுத்தி எல்லா ஆவிக்குரிய பண்புகளையும் நம்மில் உருவாக்குகின்றன. எனவே நமது நண்பர்கள், நமது உதவியாளர்கள் என்ற முறையில் அவைகளை மிகுந்த சந்தோஷத்தோடு வரவேற்க வேண்டும்.

துன்பங்கள் நமது பலவீனங்களை வெளிப்படுத்துகின்றன. எனவே பலவீன பகுதிகளை நாம் கவனிக்க ஏதுவாகிறது. சோதிக்கப்படும்போது நமது தோல்விகளைக் கண்டுபிடித்து தேவனிடம் செல்கிறோம். ஆகநாம் பரிபூரணமடையவும், நிறைவடையவும், எந்த குறைவு மில்லாமலிருக்கவும் உதவியாயிருக்கிறது.

சுத்திகரிக்கும் சோதனைகள் மூலம் பணிவுள்ள ஆவி உருவாக்கப்படுகிறது. நம்மில் சிலர் இயற்கையாகவே முரட்டுத் தன்மையுள்ளவர்களும் பணிவற்றவர்களுமாயிருக்கிறோம். சில நாட்களுக்குள் முரட்டுத்தன்மை அகன்றுவிடுகிறது. தேவகிருபையால் இழப்புகள், ஆவியில் சோர்வு, சிலுவைப் பாடுகள், துக்கங்கள் ஆகியவற்றால் இயற்கையான முரட்டுத்தன்மை மாறி சாந்தகுணமும் தாழ்மையும் இடம் பெறுகின்றன.

சுத்திகரிக்கும் தொல்லைகள் **மனஉருக்கத்தை** உருவாக்கும். அடிக்குமேல் அடிகளால் பிறர் மேல் கரிசனை உணர்வை ஏற்படுத்தும். கிரமம் கிரமமாக நாம் கர்த்தருடைய அபிஷேகம் பெற்ற தேற்றரவாளர்களாக சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய ஆயத்தப்படுத்தப்படுகிறோம்.

அதிகமாக சோதிக்கப்பட்டவர்கள் தவறு செய்யாமலிருக்க **கவனமாயிருப்பதுடன், தாழ்மையுள்ளவர்களாயு**மிருப்பார்கள். அவர்கள் முன்புபோல மிகத்துரிதமாகப் பேசுவதில்லை. தங்களைக் குறித்துக் குறைவாகப் பேசுவதோடு கர்த்தருடைய இரக்கத்தைக் குறித்து அதிகமாகப் பேசுவார்கள். தவறு செய்பவர்களிடம் சாந்தத்தோடு பேசுவார்கள்.

இவர்கள் மிகவும் **நன்றியுடையவர்கள்**. படுக்கையிலிருக்கும் எனக்கு ஒரு காலை அசைக்க வல்லமை கிடைப்பது மிகவும் சந்தோஷம். அதற்காக ஆண்டவரைத் துதிப்பேன். அது உங்களுக்கு பெரிதாகத் தோன்றாமலிருக்கலாம். ஆனால் எனக்கு அது ஒரு பெரிய ஆசீர்வாதம். எனவே அதிக துன்பங்களைப் பெறுகிறவர்கள் அதிகமாக தேவனை நன்றியுடன் துதிப்பார்கள். சோதிக்கப்பட்ட ஒரு பெண் காலை உணவுக்காகக் கிடைத்த ஒரு துண்டு ரொட்டி ஒரு கோப்பை தண்ணீருக்காக, “ஆண்டவரே இவை எல்லாவற்றிற்காகவும் மற்றும் கிறிஸ்துவுக்காகவும் நன்றி” என்று துதிப்பாள். அந்த ஊழியக்காரர் அதிகமாக சோதிக்கப்பட்டவர். அன்று குடும்பத்திற்கு இரவு உணவிற்காக சிறிதளவு உணவே காணப்பட்டது. அவர் “ஆண்டவரே, இன்றைய உணவுக்காக எங்களுக்கு கடலையும், தரையையும் ஆயத்தப்படுத்தினீரே உம்மைத் துதிக்கிறோம்” என்று ஜெபித்தார். இன்று திருப்தியான உணவுக்கு முன்பாக முகங்கோணுகிற மக்கள் சோதனையை வென்றவர்களல்ல.

தேவகிருபை செயல்படுமிடத்தில் **நம்பிக்கையுள்ள** மக்களைக் காணலாம். புயல் கப்பலை அழித்துவிடு மென்று மக்கள் எண்ணும் நிலையில் தேவபிள்ளைகள் அது கப்பலை உடைப்பதில்லை என்று உறுதியுடனிருப்பார்கள். அவர்களது அமைதியும், தைரியமும் நம்பிக்கையும் பிறர் தைரியமடைய ஏதுவாயிருக்கும்.

சோதனையை சகித்தவர்கள் தாங்கள் தகுதியற்றவர்கள் என்ற உணர்வுடையவர்கள். அவர்கள் அதிகத் துன்பங்களைக் கடந்து வந்தவர்கள். இந்த இருண்ட காடாகிய உலகவாழ்வில் தங்களுக்கென ஒரு கூடு செய்வதற்குக் கூட அவர்களால் முடியவில்லை சமயமுமில்லை. அவர்களுடைய தங்குமிடத்தில் காணப்படும் ஏராளமான முட்கள் இது ஒரு இல்லமா என எண்ண வைக்கிறது.

இவ்வாறு அதிகமாக சோதிக்கப்பட்டவர்கள்தான் மிக உன்னத ஆவிக்குரிய மனிதர்கள். இந்த ஆவிக்குரிய தன்மை பயனுள்ள தன்மையை ஏற்படுத்துகிறது. நீங்கள் ஒரு தலைவராகவோ உதவி செய்கிறவராகவோ சபையில் இருக்க விரும்பினால் இவ்விதமான பாடுகள் வழியாகக் கடந்து வருவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும்.

அனைத்து நற்பண்புகளையுமுடையவர்களாயிருக்க விரும்புகிறீர்களா? கிறிஸ்து இயேசுவில் பரிபூரணராக விளங்க ஆசைப்படுகிறீர்களா? சோதனைகள், பரிசோதனைகளை வரவேற்று அனைத்து சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். அவைகளோடு தேவனிடம் ஓடி வாருங்கள். அவைகளை அனுப்பினதற்காக தேவனைத் துதியுங்கள். பொறுமையோடு அவைகளை சகிக்கவும் அதன் மூலமாக அது பரிபூரணமாகக் கிரியை செய்யவும் தேவனிடம் கேளுங்கள். அப்போது தேவ ஆவியின் அருளால் நீங்கள் பூரணரும், நிறைவானவர்களும் ஒரு குறைவு மில்லாதவர்களாகவும் மாறுவீர்கள்.

# துன்பங்களுக்கு எதிராக வசனமாகிய பட்டயத்தை உபயோகிப்பது எப்படி?

*How to use the Sword of the word against afflictions*

William Gurunall (1617-1679)

கிறிஸ்தவனுக்கு எல்லாத் திசைகளிலுமிருந்து புயலும், பயங்கர காற்றும் வருகிறது. காற்று ஒரே புறத்திலிருந்து மட்டும் வரக்கூடிய மூன்று பக்கமும் மலைகளாலும் காடுகளாலும் வேலியடைக்கப்பட்ட இல்லத்தில் கிறிஸ்தவன் வாழவில்லை. யோபின் வீட்டை காற்று அதின் நான்கு மூலைகளிலும் அடித்து வீழ்த்தினது போல கிறிஸ்தவனின் துன்பங்களும் காணப்படுகின்றன. பலவேளைகளின் பொருளாதார நெருக்கடிகளும், சரீர பிரச்சனைகளும் அவைகளால் காயமடைந்த ஆவியும் அவனில் காணப்படும். துக்கசாகரத்தின் அலைகள் விசுவாசியின் இருதயத்தில் போதும்போது அது உடையாமலிருப்பதில்லை.

தேவன் தமது பிள்ளைகள் வெவ்வேறுவிதமான சோதனைகள், பாடுகள் வழியாகக் கடந்து செல்லச் செய்கிறார். “நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அனேகமாயிருக்கும்” சங்.34:19. வேதவசனங்கள் ஒரு தோட்டம் என்றால் அதில் ஒவ்வொரு துக்கத்திற்கும் ஆறுதலளிக்கும் வாக்குத்தத்தமிருக்கிறது. ஞானமுள்ள கிறிஸ்தவன் அவற்றை சேமித்து வைத்து பயன்படுத்துகிறான்.

பாதுகாவலுக்காகவும், ஆறுதலுக்காகவும் வேத வசனத்தை பயன்படுத்துவது எப்படி? தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு உரிமை யானவை. ஆனால் துன்பத்தின் கூரிய இருள் நிறைந்த இரவில் வாக்குத்தத்தமாகிய வாசலில் அதைத் திறக்க பயந்து நிற்பது எவ்வளவு பரிதாபம்! அப்போது தான் குழந்தையை போல உள்ளே நுழைந்து பிதாவின் கரத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும். “என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக் கொண்டு சினம் கடந்து போகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக் கொள்” ஏசா.26:20.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை தியானிக்க வேண்டும். நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைவிட நமது பிரச்சனைகளை முக்கியப்படுத்துகிறோம். ஆனால் நமது ஆவியை உற்சாகப்படுத்தக்கூடிய வலிமை வாக்குத்தத்தங்களிலுண்டு. அழுகிற ஒரு குழந்தை பாலூட்டப்படும்போதே தாயின் மார்பில் தூங்கிவிடுகிறது. ஒரு விசுவாசியும் துன்பவேளைகளில் பராது கூறாமல் வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டால் இருதயம் இனிமை பெறும். “என் உள்ளத்தின் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது” சங்.94:19.

தேன் கூட்டிலுள்ள தேனீக்கள் கலையும்போது, குழப்பமடைந்து, ஒழுங்கற்று அங்குமிங்கும் அலைகின்றன. மறுபடியும் கூட்டை அடையும்போது ஒழுங்காய் அமர்கின்றன. குழப்பம் மாறி சமாதானமாக தங்கள் பணிகளில் ஈடுபடுகின்றன. உத்தம கிறிஸ்தவ வாழ்வை இதற்கு ஒப்பிடலாம். வாக்குத்தத்தத்தின் தேவன் ஆத்துமாவின் தேன்கூடு. விசுவாசி தனது நினைவுகளை துன்பங்கள் அல்லது சோதனைகளை எண்ணி அலையவிடும் போது அவை குழப்பத்தை உண்டுபண் ணும். ஆனால் தனது எண்ணங்களையும் இருதயத்தையும் வாக்குத்தத்தத்தில் கொண்டு வரும்போது ஆறுதல் பெறு கிறான். தேவ ஆவியானவர் குழப்பமான எண்ணங்களிலிருந்து திரும்பும்படி அழைக்கிறார். “கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்திரு”சங்.37:7.

கிறிஸ்தவனின் இருதயம் அவனில் தங்கியிருக்கும் நினைவுகளால் நிறமேற்றப்படுகிறது. நடுநிலையான எண்ணங்கள் ஆத்துமாவில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. உடலில் தங்கியிராவிட்டால் உணவு உடலை வளர்ப்பதில்லை. ஆனால் ஒருவனது எண்ணங்கள் எல்லாநாளும் துக்கத்திலும், பயத்திலும் காணப்பட்டால் அவனது இரு

(8-ம் பக்கம் பார்க்க)

(7–ம் பக்கத் தொடர்ச்சி)

*தயம் பலவீனப்படுத்தும் ஆவி உடையதாயிருக்கும் லூக்.13:11 அவன் தன் இருதயத்தை பாடுகளிலிருந்து உயர்த்தி வாக்குத்தத்தங்களை தியானிக்க முடியாது.*

*அதே வேளையில் விசுவாசி வாக்குத்தத்தங்களை தனது இருதயத்தில் கட்டிக்கொண்டு நடந்தால் அது அவனில் கிரியை செய்யும். எந்த வேதனையும், பயமும், ஆபத்தும் அவனிலிருந்து அதைப் பிரிக்க முடியாது. அத்தகைய விசுவாசி துன்ப நேரங்களில் பாடிக் கொண்டும் துதித்துக் கொண்டுமிருப்பான். மற்றவர்கள் பெருமூச்சு விட்டுக் கொண்டும், முறுமுறுத்துக் கொண்டுமிருக்கலாம்.*

*வாக்குத்தத்தங்களை பெற, ஆபிரகாம் தூதர்களை வருந்தியழைத்து கூடாரத் திற்குக் கூட்டிச் சென்றது போல துன்ப நாட்களில் ஆண்டவரை விடாமல் பற்றிக்கொள்ள வேண்டும். இதைக் கற்றுக்கொள்ளும் போது துன்பத்தின் கடினத்தை உணரமாட்டீர்கள்.*

*பிஸ்காலின் கொடுமுடியில் நின்று அதாவது தியானத்துடன் விசுவாசக் கண்களால் தேவன் சம்பாதித்து வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை நோக்கினால் உலக சிநேகத்திலிருந்து விலகி அதை உதறித் தள்ள முடியும்.*

*ஆனால் நம்மில் அனேகர் தேவனுடைய பர்வதத்தில் ஏறக்கூடாமல்களைப் படைகிறோம். அப்போது, "எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய் விடும்" சங்.61:2 என்று ஜெபிப்போமாக. அப்போது அவர் பரிசுத்த பர்வதமாகிய தியானத்திற்கு உயர்த்துவார். தேவனுடைய ஆவி அவரது கரங்களில் நம்மை அங்கு தூக்கிச் செல்வார்.*

*நாம் வாஞ்சையுள்ள ஆசாரியராயிருந்தால், விறகு பலிப்பொருள் ஆகியவற்றை ஒழுங்காக வைத்தால் பரத்திலிருந்து அக்கினி அதின்மேல் இறங்கும். ஆனால் எரிபொருள் கொடுக்க கவனமாயிருக்க வேண்டும். வாக்குத்தத்தங்களிலிருந்து தியானத்திற்கான சத்தியத்தை எடுத்து உங்கள் எண்ணங்களை அதில் போடுங்கள். அப்போது தேவ ஆவியானவர் உங்கள் அன்பை தூண்டி எழுப்புவார். "..... நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது, அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் பண்ணினேன்" சங்.39:3.*

### வாக்குத்தத்தங்களை இரக்க ஆசனத்தில் வைத்து ஜெபியுங்கள்

*தியானம் பரலோக நன்மைகளால் இருதயத்தை நிரப்புகிறது. ஜெபம் அவற்றை தேவனிடம் ஊற்றி அவர் விரும்பும் விடுதலையை விசுவாசிக்குத் தரச் செய்கிறது. காசு இல்லாமல் இருக்கும் ஒருவருக்கு இன்னொருவர் காசு தரவேண்டியிருப்பதை வாசித்து அறிவதால் அவருக்கு அடுத்த உணவு கிடைப்பதில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களை தியானிப்பதால் பாடுகளிலிருந்து விடுதலை உண்டு என்று கண்டாலும் விசுவாசமுள்ள ஜெபம் அதை வருவிக்க வேண்டும். "தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும்" சங்.69:32. "அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்" சங். 34:5. நாம் ஜெபிக்காவிட்டால் தேவனுடைய இரக்கத்தைப் பெற முடியாது.*

*வாக்குத்தத்தங்களைப் பார்த்து அதன் செழிப்பை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டபோது கிருபாசனத்தைச் சேர்ந்து அதனை கர்த்தருக்கு முன்பாக விரித்து வைக்க வேண்டும். தாவீது அப்படிச் செய்தான் : "நீர் என்னை நம்பப் பண்ணின வசனத்தை உமது அடியேனுக் காக நினைத்தருளும்" சங்.119:49.*

### தேவன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று விசுவாசத்துடன் செயல்படவேண்டும்

*வாக்குப் பண்ணினவர் உத்தமமும் பெலனுமுடையவர் என்பதில் கிறிஸ்தவத்தின் பாதுகாவலிருக்கிறது. ஆனால் அவர் தமது வாக்கை நிறை வேற்றுவார் என்ற விசுவாசம் நமக்கு இல்லாவிட்டால் அது உண்மையாக முடியாது. விவாதங்கள் உங்களை அதைரியப்படுத்தலாம். உங்கள் விசுவாசம் பெலவீனமாயிருந்தால் அந்த வாக்குத்தத்தம் பலனளிப்பதில்லை. விசுவாசிகள் பயத்தால் கட்டப்பட்டிருப்பதால் வல்லமையுள்ள தேவன் கிரியை செய்ய முடிவதில்லை.*

*"அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள்" மத்.8:26. அவர்களிடம் காணப்பட்டது 'அற்ப விசுவாசம்'. தேவனைக் குறித்த நமது புரிந்து கொள்ளுதலின்படியே வெற்றி அல்லது தோல்வி ஏற்படும். உறுதியாயிருக்கும் ஒரு வீடு புயலில் விழுந்துவிடும் என்று பயப்படுகிறவன் அதைவிட்டு வெளியே அடைக்கலம் தேடுவான்.*

*தேவ வாக்குத்தத்தங்களின் வல்லமையின் மேல் உறுதியான விசுவாசம் வைக்க நமது புலன்களையும். விவாதத்தையும் பயன்படுத்தக்கூடாது. ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்கு நம்பக்கூடாததாயிருந்தாலும் அவன் தடுமாறவில்லை. "..... தன் சரீரம் செத்துப்போனதை எண்ணாதிருந்தான்" ஆனால் சகரியா ஏன் தடுமாறினான்? அவன் விவாதத்திற்கு இடங்கொடுத்து ஒரு பிள்ளைபெறுவதற்கு அவனது வயது சரியல்ல என்று எண்ணினான். தோமாவைப் போல் நமது விசுவாசம் நமது விரல்களிலிருக்கிறது. நமது புலன்களை நாம் நம்புகிறோம். ஆனால் புலன்களும் விவாதமும் முடிவுறும்போது தான் தேவன் துன்புறும் தமது பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டு வருவார். கப்பற்சேதத்தின் போது அனைத்து நம்பிக்கைகளையும் இழந்த வேளையில் விசுவாசத்தால் ஒருவர் கூட மரிப்பதில்லை என அறிந்து பவுல், "மனுஷரே திடன் கொள்ளுங்கள் எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" என்றான் அப்.27:25.*

*தூதன் பேதுருவை விலாவிலே தட்டி "சீக்கிரமாய் எழுந்திரு ...... என் பின்னே வா" அப்.12:7-8 என்றபோது பேதுரு கேள்வி கேட்காமல் கீழ்ப்படிந்தான். சங்கிலியால் கட்டப்பட்ட அவன் எப்படி நடக்க முடியும், இரும்புக் கதவைக் கடக்க முடியுமா? இவ்வாறான கேள்விகளுக்கு இடங்கொடாமல் எழுந்தபோது சங்கிலிகள் கழன்றன. இரும்புக் கதவு தானாகத் திறவுண்டது. எனவே இது கூடாதது என்று சொல்ல வேண்டாம். விசுவாசம் சுயாதீனமாக வாக்குத்தத்தத்தை பின்பற்றினால் தேவன் விவாதமும் புலன்களும் கட்டிய முடிச்சுகளை அவிழ்க்க முடியும்.*

*லூதர் எங்குமுள்ள கிறிஸ்தவர்களிடம் 'எப்படி' என்பதை சிலுவையிலறைய வேண்டும் என்றார். இந்தக் கஷ்டத்தின் வழியாகக் கடந்து செல்வது எப்படி? இந்தக் கடின தாக்குதல்களை எதிர்கொள்வது எப்படி? என்ற கேள்விகள் வேண்டாம். தேவன் தந்திருக்கும் வாக்குகள் உங்களுக்கும் தீமைகளுக்குமிடையில் நிற்கும். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" எபி.13:5 .என் கிருபை உனக்குப் போதும்....2 கொரி.12:9. "மரணமானாலும் .... நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டா தென்று நிச்சயித்திருக்கிறேன்" ரோமர் 8:38-39.*

*ஒரு யூத பழமொழி இவ்வாறு கூறுகிறது : ஜன்னல்களைப் பூட்டுங்கள், அப்போது வீடு பிரகாசமாயிருக்கும். இன்னொரு விதமாகக் கூறினால் புலன்களால் நியாயம் தீர்க்க வேண்டாம். சர்வவல்லமையுள்ள தேவன் மீதுள்ள விசுவாசத்தால் தீர்க்க முடியும் என்பதே. நடைபெறமுடியாதென தோற்றமளிப்பவைகளை நம்புவது விசுவாசத்தின் மிக உன்னத நிலை. அதுபோல கிறிஸ்துவுக்காக பொறுமையாக வேதனைகளை சகிப்பது உயரிய அன்பின் செயல். இவற்றில் மாம்ச விவாதத்தை அதாவது தேவனுடைய வல்லமையையும், பெலத்தையும் எதிர்க்கின்ற மாம்ச சிந்தையை விட்டுவிடுகிறோம்.*

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

***Book Packets contains periodicals***

To